



# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

dhinatamil.tn@gmail.com • மாற்றத்தின் ஆரம்பம் • www.dhinatamil.com • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 30.01.2026 . மலர் 04 . இதழ் 029. வெள்ளிக்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 30.01.2026 . VOL 04 . ISSUE 029. FRIDAY. PAGES 4. Rs.5





## கட்சிக்கு துரோகம் இழைத்தவர்... அதிமுகவில்

# ஓ.பி.எஸ்.க்கு இடமில்லை !

## எடப்பாடி பழனிசாமி திட்டவட்டம் !!


சேலம், ஜன.30-

“அதிமுகவின் பொதுக்குழு கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவின்படி அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். எனவே அவரை கட்சியில் சேர்ப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இருந்து நீக்கியது என்பது நான் எடுத்த முடிவு இல்லை” என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சேலத்தில் செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, ‘நான் பலமுறை சொல்லிவிட்டேன். அவர் 4 வருடமாக கட்சியில் இணைய வேண்டும் என கேட்டு வருகிறார். அதிமுகவின் பொதுக்குழு கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவின்படி அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். எனவே அவரை கட்சியில் சேர்ப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இருந்து நீக்கியது என்பது நான் எடுத்த முடிவு இல்லை. 2500 பொதுக்குழு உறுப்பினர்கள் சேர்ந்த எடுத்த முடிவின்படி, ஓபிஎஸ் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் கட்சிக்கு இழைத்த துரோகம் காரணமாக பொதுக்குழு உறுப்பினர்கள் எடுத்த முடிவு இது.

2026 தேர்தல் முடிவில் அதிமுகதான் ஆட்சியமைக்கும். தேமுதிகவுடன் பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கவில்லை. கூட்டணி இறுதி செய்யப்பட்டவுடன் உங்களிடம் தெரிவிப்போம். சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். கூட்டணி இறுதி வடிவம்



பெற்றவுடன் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தையை தொடங்குவோம்” என்று கூறினார்.

முன்னதாக முன்னாள் முதல்வரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகம் ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் தேனி மாவட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். பெரியகுளம் அருகே கைலாசபட்டியில் உள்ள ஓபிஎஸ் பண்ணை வீட்டில் நடந்த இக்கூட்டத்தில், தேனி மாவட்ட நகர, ஒன்றிய பேரூர் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் என பலர் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய ஓபிஎஸ், “எந்த ஒரு முடிவும் ஏற்படாமல் வதந்தியை தொலைக்காட்சி மற்றும் யூடியூப் நிறுவனங்கள் செய்தியாக வெளியிடுவது ஜனநாயகத்திற்கு ஆபத்தானது.

ராமநாதபுரத்தில் நான் போட்டியிட முக்கிய காரணம் எங்கள் பக்கம் தொண்டர்கள் இருப்பார்களா என்பதற்காகவே சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்டேன். 12 நாட்கள் தான் எனது தேர்தல் பிரச்சாரம் இருந்தது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 6 ஓ.பன்னீர்செல்வத்தை நிறுத்தினார்கள். அந்த சூழ்ச்சிகளை முறியடித்து அதிமுகவை மீட்பதற்காக சட்டப் போராட்டம் நடத்தி மீட்பது தான் எங்கள் நோக்கம்.

தேர்தலில் தனிக் கட்சி துவங்குவது அல்லது தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னும் நாங்கள் முடிவு எடுக்கவில்லை. கட்சியை மீட்பதற்காகவே தொடர்ந்து சட்டப் போராட்டமாக போராடி வருகிறேன். தேவை இல்லாத குழப்பங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டாம்.

எம்ஜிஆர், ஜெயலலிதா என இருவரை முதல்வராக ஆக்கியது இந்த தேனி மாவட்டம். கழகத்தை மீட்பதற்காகவே நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம். அதிமுக ஒருங்கிணைய வேண்டும் என்பதே நோக்கம்” என்றார்

ஒன்றிணைய வேண்டும் என நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் கடம்பூர் ராஜூ நாங்கள் ஒன்றாக உள்ளோம், அவர் தான் தனியாக உள்ளார் எனக் கூறுகிறாரே என்ற கேள்விக்கு பதிலளித்த ஓபிஎஸ், “தமிழக மக்கள் அனைவரும் அறிவார்கள். பொய்யை திரும்பத் திரும்ப சொன்னால் உண்மையாகிவிடாது என்பதை கடம்பூர் ராஜூக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்” என்றார்.

என்டிஏ கூட்டணிக்கு நீங்கள் வருவதற்கு டிடிவி. தினகரன் ஆசைப்படுவதாக கூறியுள்ளாரே என்ற கேள்விக்கு, “நட்பின் அடிப்படையில் அவர் கூறியுள்ளார். டிடிவி தினகரன் மற்றும் எனது அருமை அண்ணன் எடப்பாடி பழனிசாமி அதிமுக வெற்றி பெற வேண்டும் என கூறுகிறார்கள். அதைத்தான் நானும் கூறுகிறேன். டிடிவி தினகரன் நினைத்தால் நாங்கள் இணைய வழிவகை செய்ய வேண்டும்.

இரண்டாவது தர்மயுத்தம் மனோஜ் பாண்டியன் மற்றும் வைத்திலிங்கம் ஆகியோரால் தான் ஏற்பட்டது. தேர்தலில் போட்டியிடுவதற்காக இந்த இயக்கம் துவங்கவில்லை. கட்சியை மீட்பதற்காகவே துவக்கப்பட்டது. அதிமுகவில் இணைய நாங்கள் தயார். டிடிவி தினகரனும் எடப்பாடி பழனிசாமியும் தயாரா” என முடித்தார்.

அதிமுகவில் இணைய ஓபிஎஸ் மீண்டும் விருப்பம் தெரிவித்த நிலையில், இபிஎஸ் அதனை உடனடியாக மறுத்துள்ளார். எனவே, இனி ஓபிஎஸ் அடுத்தகட்டமாக என்ன முடிவு எடுப்பார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.



மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோசாகுளம் பாண்டியன் நகரில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம்–2026. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம், இடமாற்றம் தொடர்பாக பெறப்பட்ட படிவங்கள் குறித்து சரிபார்ப்புப் பணியினை வாக்காளர் பட்டியல் பார்வையாளர்–தமிழ்நாடு தேசிய சுகாதார இயக்கத்தின் இயக்குநர் டாக்டர்.அருண் தம்புராஜ் தலைமையில் மாவட்ட தேர்தல் அலுவலர்–மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.



மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், தோப்பூர் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதி திட்டத்தின் கீழ் ரூபாய்.8.50 லட்சம் மதிப்பீட்டில் பெருவாரியான மரக்கன்றுகள் நடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமா தலைமையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் பா.பொன்னையா பார்வையிட்டார்.

## திருப்புவனம் அருகே மணலூரில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் மூலமாக மாணவர்களுக்கு சட்ட விழிப்புணர்வு முகாம்




திருப்புவனம், ஜனவரி. 30–

சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் சார்பில் மணலூர் உள்ள தனியார் பள்ளியில் நடைபெற்றது. இம்முகாமில் சிவகங்கை மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் தலைவர்/ முதன்மை மாவட்ட நீதிபதி மற்றும் சிவகங்கை மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் செயலாளர்/ சார்பு நீதிபதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவினர், மற்றும் வழக்கறிஞர்கள் திருப்புவனம் காவல் ஆய்வாளர் முத்துகுமார், மதுவிலக்கு பிரிவு காவல் ஆய்வாளர் ஆண்டடேட் கலியஸ்தா, மாவட்ட சமூகநல அலுவலக ஒருங்கிணைந்த சேவை மைய நிர்வாகி சுகான்யா மற்றும் ஆசிரியர்கள், சட்ட தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !



மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்.8 மருதங்குளம் பகுதியில் புதிய சாலை அமைக்கும் பணியினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## இராமேஸ்வரம் கோயில் தைப்பூச தெப்ப திருவிழாவையொட்டி 1ந்தேதி காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை நடை சார்த்தப்படும்



இராமேஸ்வரம்.ஜன.30–

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி திருக்கோவிலில் நாளை சனிக்கிழமை தைப்பூச தெப்ப திருவிழாவை முன்னிட்டு திருக்கோவில் பூஜை நேரம் மாற்றப்பட்டுள்ளது தொடர்பாக இணை ஆணையர் செல்லதுரை அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் வரும் 31 ஆம் தேதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு பிள்ளையார் தெப்பம் நடைபெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தைப்பூச திருப்பத் திருவிழாவை முன்னிட்டு அதிகாலை 4 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு 5 மணி முதல் 5 மணி வரை ஸ்படிகலிங்க பூஜை நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து பூஜா காலங்கள், சாயரட்சை பூஜை வரை நடைபெற்று காலை 11 மணிக்கு மேல் பஞ்சமூர்த்திகள் ஸ்ரீ லட்சுமணனேஸ்வரர் திருக்கோவிலுக்கு புறப்பாடாகிய உடன் திருக்கோவில் நடை சாத்தப்படும். பகல் 1.30 மணிக்கு மேல் தீர்த்தவாரி நடைபெற்று மாலை 5.00 மணிக்கு மேல் தெப்ப மண்டபத்தில் தீபாராதனை நடைபெற்று மாலை 6.00 மணிக்கு மேல் இரவு 7.00 மணிக்குள் லட்சுமண தீர்த்தத்தில் தெப்ப உற்சவம் நடைபெறும். இரவு 7:30 மணிக்கு தீபாராதனை நடைபெற்று பஞ்ச மூர்த்திகள் புறப்பாடாகி வீதி உலா நடைபெறும். ஆகையால் 01.02. 25 அன்று காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை திருக்கோவில் நடை சாத்தப்படும் என திருக்கோயில் இணை ஆனையர் செல்லத்துரை செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் மதுரை மாவட்ட காவல்துறையும் இணைந்து உயிர்காக்கும் இதய - சுவாச மீட்பு மற்றும் அடிப்படை உயிர் ஆதரவு சிகிச்சை 1500 - க்கும் மேற்பட்ட போலீஸாருக்கு பயிற்சி



மதுரை, ஜன.30-

மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் மதுரை மாவட்ட காவல்துறையும் இணைந்து உயிர்காக்கும் இதய - சுவாச மீட்பு மற்றும் அடிப்படை உயிர் ஆதரவு சிகிச்சை 1500 - க்கும் மேற்பட்ட போலீஸாருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே. அரவிந்த், பேசிய போது காவல்துறை பணியாளர்களை பொதுமக்களின் உயிர்காக்கும் முதல் செயற்பாட்டாளர்களாக மாற்றும் வகையில் ஏற்படுத்தப்பட்டது இதன் மூலம்

திடீரென ஏற்படும் மாரடைப்பு நேரங்களில், சரியான நேரத்தில் செய்யப்படும் இந்த முதலுதவி சிகிச்சை மருத்துவமனையை சென்றடைவதற்கு முன்பு உயிரிழப்பு ஏற்படுவதைத் தடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்த சிறப்பு பயிற்சி மூலம் கடந்த 24 வாரங்களில், ஊமச்சிகுளம், மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, சமயநல்லூர் மற்றும் பேரையூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நடைபெற்ற 20-க்கும் மேற்பட்ட முகாம்கள் மூலம் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன்முறையாக, அதுவும் தமிழ்நாட்டில் இவ்வளவு பெரிய அளவில் முன்னெடுக்கப்படும் முதல் முயற்சி இதுவாகும். கடந்த 2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், மதுரை மாவட்ட காவல் துறை மற்றும் மீனாட்சி மிஷன் மருத்துவமனை இடையிலான கூட்டு முயற்சியாக இத்திட்டம் தொடங்கப்பட்டது. மாரடைப்பு போன்ற அவசர காலங்களில், ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்பாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி அளித்து உயிரைக் காக்கும் திறனை காவலர்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகும். மேலும் மாவட்ட காவல் அலுவலகப் பணியாளர்கள், ஆயுதப்படைப் பிரிவினர் என 10-க்கும் மேற்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த காவலர்களுக்கு, சிபிஆர் (இதய சுவாச மீட்பு) செய்வது எப்படி, இதயத் துடிப்பை மீட்டெடுக்கும் கருவியை எப்படிப் பயன்படுத்துவது மற்றும் அவசர காலங்களில் எப்படிச் செயல்படுவது என்பது குறித்து நேரடிப் பயிற்சி அளிக்கப்பட்டது.என்று கூறினார். இந்த விழிப்புணர்வு நிகழ்வில் மருத்துவமனை மருத்துவக் குழுவினர் மற்றும் காவல் துறையினர் பங்கேற்று சிறப்பித்தனர்.

## மண்டபம் முகாமில் முன்னாள் மாணாக்கர்கள் சந்திப்பு



இராமேஸ்வரம், ஜன.30-

மண்டபம் முகாம் மேல்நிலைப்பள்ளியில் படித்த முன்னாள் மாணக்கள் சந்திப்பு,பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாம் அரசு மேல் நிலைப்பள்ளியில் 1985 முதல் 1992 வரை படித்த முன்னாள் மாணக்கள் சந்திப்பு நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. மண்டபம் பேரூராட்சி தலைவர் டி.ராஜா தலைமை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் எஸ்.ரீனா முன்னிலை வகித்தார். உதவி தலைமை ஆசிரியர் ஜெயக்குமார் வரவேற்புரையாற்றினார். பேரூராட்சி உறுப்பினர் சம்பத்ராஜா வாழ்த்துரை வழங்கினார். இதில், 50 க்கும் மேற்பட்ட மாணக்கள் பங்கேற்று பள்ளி பருவதில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து ஒருவருக்கொருவர் நினைவு கூர்ந்தனர். முன்னாள் ஆசிரியர்களுக்கு நினைவு பரிசு வழங்கி பாராட்டினர். இதனைத் தொடர்ந்து, பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடவு செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை முன்னாள் மாணவர்கள் தில்லைராஜன்,ரஜினிகாந்த் ,ரமேஷ்,முஜிபுரகுமான்,செய்யது காசீம் ஆகியோர் செய்திருந்தனர்.

# டேக் டெவலப்பர்ஸ் விளம்பரத் தூதராக இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் நியமனம்




சென்னை, ஜன.30-
தரமான கட்டுமானம், வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட வளர்ச்சி ஆகியவற்றிற்காக அறியப்பட்ட, வேகமாக வளர்ந்து வரும் கட்டுமான நிறுவனமாகிய டேக் டெவலப்பர்ஸ் (DAC Developers), இசைப் புயல் ஏ.ஆர். ரஹ்மானை தமது விளம்பரத் தூதராக அறிவித்தது.

அவரது முன்னிலையில் சுமார் 1,000 புதிய வீடுகள் கொண்ட ஐந்து குடியிருப்புத் திட்டங்கள் சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டன. இக்குடியிருப்புத் திட்டங்கள், போரூர் அருகேயுள்ள காட்டுப்பாக்கம், சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்குவார்சத்திரம், போரூர் இராமச்சந்திரா மருத்துவமனைக்கு அருகேயுள்ள குமணன்சாவடி, ஓ.எம். ஆர்.-இல் உள்ள சோழிங்கநல்லூர் மற்றும் சிறுசேரி ஆகிய இடங்களில் கட்டப்படவுள்ளன.

டேக் நிறுவனம் ஒரு நவீன, நம்பகமான மற்றும் சர்வதேச மதிப்பு கொண்ட பிராண்டாகத் தம்மை நிலைநிறுத்திக்கொள்ள இந்த டேக் டெவலப்பர்ஸ் ஏ.ஆர். ரஹ்மான் இணைவு பெரும் உந்து சக்தியாக இருக்கும். மேலும் டேக் நிறுவனத்தின் புதுமை, நேர்மை மற்றும் உலகத்தரம் வாய்ந்த கட்டுமானத் தரங்களுக்கான உறுதிப்பாட்டை இந்த இணைவு வலுப்படுத்தும்.

இது குறித்துப் பேசிய டேக் டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குனர் எஸ். சதீஷ் குமார், "எங்களது டேக் குடும்பத்திற்கு ஏ.ஆர். ரஹ்மானை வரவேற்பதில் உண்மையிலேயே பெருமை கொள்கிறோம். நாங்கள் வெறும் கட்டமைப்புகளை மட்டும் கட்டாமல், வாழ்க்கையை சுவாரஸ்யப்படுத்தும் வகையில் மகிழ்ச்சியான இல்லங்களை உருவாக்குகிறோம்.

இதயத்திலிருந்து இசையை உருவாக்குவதைப் போல, அன்புடன் அழகான வீடுகளை உருவாக்கும் குழுவை நான் டேக் நிறுவனத்தில் காண்கிறேன். ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சி பொங்கும் வகையில் வீடுகளை கட்டிவரும் டேக் டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் விழுமியங்களை நான் மதிக்கிறேன்" என்று தெரிவித்தார்

# ஸ்பிக்நகர் மேல்நிலைப் பள்ளியில் 53-வது விளையாட்டு தினவிழா




தூத்துக்குடி, ஜன.30-
தூத்துக்குடி ஸ்பிக்நகர் மேல்நிலைப்பள்ளியின் 53-வது விளையாட்டு தினவிழா பள்ளி மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்குத் தூத்துக்குடி மாவட்ட உதவி காவல்துறை கண்காணிப்பாளர் (பயிற்சி) ராகுல் வி கோபால் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அவர் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, வெண்புறாவைப் பறக்கவிட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். சர்வதேச கைப்பந்து வீரர் மங்கள ஜெயபால்கௌரவ விருந்தினராகப் பங்கேற்று சிறப்பித்தார். பள்ளித்தலைவர் பாலு, கிரீன்ஸ்டார் நிறுவனத்தின் முழுநேர இயக்குநர் செந்தில்நாயகம், பள்ளிச்செயலர் பிரேம்சுந்தர், தலைமையாசிரியர் பாபு ராதாகிருஷ்ணன் மற்றும் பள்ளி நிர்வாகக் குழுவினர் விழாவில் முன்னிலை வகித்தனர். தொடக்க நிகழ்வாக மாணவர் சுப்பாராயலு அனைவரையும் வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து, பள்ளியின் விளையாட்டுச் சாதனைகள் குறித்த ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. விழாவில் 6 முதல் 8-ஆம் வகுப்பு மாணவர்களின் கூட்டு உடற்பயிற்சி, சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விறுவிறுப்பான ஓட்டப்பந்தயங்கள் நடைபெற்றன.

மாணவிகளின் உடற்பயிற்சி நடனம், மாணவர்களின் ஜிம்னாஸ்டிக் மற்றும் கராத்தே சாகசங்கள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன. மேலும், தமிழர்களின் பாரம்பரியக் கலையான 'ஒயிலாட்டத்தை' மாணவ-மாணவியர் இணைந்து ஆடி அனைவரின் பாராட்டையும் பெற்றனர். சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் உரையாற்றியதுடன், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கிக் கௌரவித்தனர். நிறைவாக, மாணவன் மாாிஸ்வா் நன்றியுரை வழங்க, நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

# சங்கரன்கோவிலில் டிசம்பர் 3 இயக்கம் துவக்க விழா மாற்றுத்திறனாளிகளுக்கு சங்கம் துவக்கம் - பாராட்டு விழா, முதல்வர் துணை முதல்வருக்கு பாராட்டு முப்பெரும் விழா!

## ராஜா எம்எல்ஏ பங்கேற்று சிறப்புரை !!




சங்கரன்கோவில், ஜன.30-
சங்கரன்கோவிலில் டிசம்பர் 3, இயக்கம் துவக்க விழாவும் மாற்றுத்திறனாளிகளுக்கு பாராட்டு விழாவும் மாற்றுத்திறனாளிகள் சங்க துவக்க விழாவும் முதலமைச்சர் மு க ஸ்டாலின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு பாராட்டு விழாவும் இணைந்த முப்பெரும் விழா நடைபெற்றது

இவ்விழாவில் சிறப்புரையாற்றிய தென்காசி வடக்கு திமுக மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பேசுகையில் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் ஊனமுற்றோர் என்று இருந்த பட்டியலை தன்மானத்தோடு வாழ வழி வகுக்கும் வகையில் அவர்களை மாற்றுத்திறனாளிகள் என்று அழைக்கும் படியும் அவர்களுக்கு என தனி ஒரு துறையை உருவாக்கி நலத்திட்டங்களை வழங்கியவர் டாக்டர் கலைஞர் அவர் வழியில் மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டவர் முதலமைச்சர் மு க ஸ்டாலின் டாக்டர் கலைஞர் வழியில் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை ரூபாய் 1500 ரூபாய் 2000 ஆக உயர்த்தி தற்போது 3000 என உயர்த்தி வழங்கி உள்ளார் முதல்வர் மு க ஸ்டாலின் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் வகையில் அவர்களை ஊக்கப்படுத்தி வெற்றி பெறுபவருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என அறிவித்தவர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இந்த திமுக அரசு மாற்றுத்திறனாளிகள் அதிகாரத்தில் பங்கு பெற வேண்டும் என்ற அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளில் நேர் மன உறுப்பினர்களாக மாற்றுத்திறனாளிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் மாற்றுத்திறனாளிகளுக்காக திமுக அரசின் செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்தும் ராஜா எம்எல்ஏ விளக்கி விரிவாக பேசினார் சிறப்பு விருந்தினர்களாக டிசம்பர் 3 இயக்க நிறுவனத் தலைவர் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரியம் உறுப்பினர் மாநிலச் செயலாளர் பேராசிரியர் தீபக் முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார் அப்புறம் விழாவில் மாவட்ட தலைவர் மணி தலைமை ஆலோசகர் சுப்பிரமணியன் செயற்குழு உறுப்பினர் நிர்மலா மாவட்ட துணை தலைவர் நியமன உறுப்பினர் ஜெகநாதன் மாவட்ட துணைச் செயலாளர் வீரபாண்டியன் மாவட்ட இணை செயலாளர் முருகேசன் சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், அவைத்தலைவர் சுப்பையா மாவட்ட பொருளாளர் சரவணன் நகர செயலாளர் பிரகாஷ் மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன் மாவட்ட பொருளாளர் இஸ்ரவேல் தாமஸ் துணைப் பொதுச் செயலாளர் ஷேக் முகமது மற்றும் டிசம்பர் 3 இயக்க நிர்வாகிகள் மாற்றுத்திறனாளிகள் நியமனஉறுப்பினர்கள் திமுகவினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர் முடிவில் மாவட்டத் துணைத் தலைவர் ஜெகநாதன் நன்றி கூறினார்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அறிஞர் அண்ணா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 77-வது குடியரசு தினவிழாவில் மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தம் பணிகளில் சிறப்பாக பணியாற்றிய செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலகத்தில் பணிபுரியும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் எஸ்.செல்வலெட் சுஷ்மாவுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.ஸ்டாலின் உள்ளார்.

# கலெக்டர் அலுவலகங்களில் மாதம் ஒருமுறை குறை கேட்பு கூட்டம் : முன்னாள் மத்திய ரிசர்வ் காவல் படையினர் கோரிக்கை



திருவண்ணாமலை. ஜன.30-
முன்னாள் மத்திய ரிசர்வ் காவல் படை (சிஆர்பிஎப்) நலச்சங்கத்தின் முதல் மாநில செயற்குழு கூட்டம் திருவண்ணாமலை நல்லவன்பாளையத்தில் உள்ள திருமூலர் ஆசிரமத்தில் நேற்று நடைபெற்றது.

அனைவரையும் சங்கத்தின் துணைப் பொதுச் செயலாளர் ஸ்ரீபதி வரவேற்றார். மாநிலத் துணைத் தலைவர் சாரதி கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் அசோகன், துணைப் பொதுச் செயலாளர் ஜெகதீசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநிலத் தலைவர் எம்.கைலாசம் சிறப்புரையாற்றினார். மாநில பொருளாளர் ஜெ.பழனி உள்பட பலர் பேசினார்கள். வேலைவாய்ப்பில் ஓய்வு பெற்ற சிஆர்பிஎப் வீரர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், இந்நாள் மற்றும் முன்னாள் சிஆர்பிஎப் வீரர் குடும்பத்திற்கு வீட்டு வரி மற்றும் குடிநீர் வரிகளை ரத்து செய்திட வேண்டும், காவல்துறை கேண்டீனில் சிஆர்பிஎப் இந்நாள் மற்றும் முன்னாள் வீரர்கள் பொருட்களை வாங்குவதற்கு அனுமதிக்க வேண்டும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒவ்வொரு மாதமும் முன்னாள் சிஆர்பிஎப் வீரர்களுக்கான குறை கேட்பு முகாமை நடத்திட வேண்டும் உள்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் தமிழக முழுவதும் இருந்து சிஆர்பிஎப் படை வீரர்களும், முன்னாள் வீரர்களும் கலந்து கொண்டனர். முடிவில் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.சங்கரன் நன்றி கூறினார்.

# விளாத்திகுளத்தில் விடுதலைச் சிறுத்தை சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் !




விளாத்திகுளம், ஜனவரி.30-
தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு வைக்கப்பட்டிருந்த மொழிப்போர் தியாகிகளின் புகைப் படங்களுக்கு விடுதலைச் சிறுத்தை கட்சி சார்பில் மாவட்டச் செயலாளர் ஆ.சடையாண்டி தலைமையில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

விடுதலைச் சிறுத்தை கட்சி வழக்கறிஞர் அணி மாநில துணைச் செயலாளர் பெஞ்சமின் பிராங்கிளின் சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வில் விடுதலைச் சிறுத்தை கட்சி புதூர் ஒன்றிய செயலாளர் விஜயன், விடுதலைச் சிறுத்தை கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கோவை செட்டிபாளையம் அண்ணா நகர் பகுதியில் சமூக நல்லிணக்க பொங்கல் விழா



கோவை, ஜன.30-
கோவை மாவட்டம் செட்டிபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட அண்ணா நகர் பகுதியில் சமுதாய நல்லினக்க பொங்கல் விழா, ராணா சங்கர் தலைமையில் மிக விமர்சையாக நடைபெற்றது.இந்நிகழ்வில் பெண்களுக்கான கோல போட்டி சிறுவர் சிறுமி யருக்கான விளையாட்டு போட்டிகள் மற்றும் ஆண்கள் பெண்கள் உறியடிக்கும் போட்டி ஆண்கள்,பெண்கள் கபடி போட்டி,ஓட்டப்பந்தயம்,ஆகிய போட்டிகள் நடைபெற்றன,இந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சிறந்த பரிசுகளும் வழங்கப்பட்டது.இதில் சாதி மத பேதம் இன்றி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# ஐந்து அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மாபெரும் முற்றுகை போராட்டம்




முதுகுளத்தூர், ஜன.30-
ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் தமிழ்நாடு வைகை விவசாய சங்கம் சார்பாக மாபெரும் முற்றுகை போராட்டம் தமிழ்நாடு வைகை விவசாய சங்க தலைவர் பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்றது. இதன் துவக்கம் முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஊர்வலமாக சென்று காந்தி சிலை அருகே வந்து நிறைவு பெற்றது இதே போல் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு போராட்டம் நடைபெற்றது

இதில் மைக்கேல் மாநில கவுரவ தலைவர் மரகத வேலு மாவட்ட செயலாளர் கோவிந்தன் மாவட்ட தலைவர் முனியசாமி கீரனூர் ஊராட்சி மன்ற தலைவர் மூவேந்திரன் முதுகுளத்தூர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் மோகன் தாஸ் கமுதி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் பூமி சேகர் கமுதி வட்டார விவசாயி முருகேசன் செல்வநாயகபுரம் இதில் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கைகள் நடப்பாண்டு சம்பா பருவ சாகுபடி பகுதி மழையின்றி நெற்கதிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன பாதிக்கப்பட்ட நெற்கதிர்களுக்கு ஏக்கருக்கு தல 25 ஆயிரம் வழங்கவும் பருவ மழையின்றி முற்றிலுமாக பாதிக்கப்பட்ட சம்பா பருவ விவசாயிகளுக்கு முழுவதுமாக வேளாண் பயிர் காப்பீடு தொகை வழங்க வேண்டும் கூட்டுறவு கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யவும் குண்டாறு வடிவ உபகோட்ட தொகை 16 கோடியை ரகுநாத காவிரி கால்வாய் தூர்வார முழுமையாக மராமத்து செய்ய வேண்டியும் முதுகுளத்தூர் பகுதியில் உள்ள அனைத்து கம்மாய்களுக்கும் வைகை தண்ணீர் ஆண்டு தோறும் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வட்டாட்சியர் கோகுல்நாத்திடம் விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தனர் இதில் பல கிராமங்களில் இருந்து ஏராளமான விவசாயிகள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

# கஞ்சா வைத்திருந்த வாலிபர்கள் பிடிபட்டனர்

களியக்காவிளை, ஜன, 30-
களியக்காவிளை அருகே கஞ்சா வைத்திருந்த 2 வாலிபர்களை போலீசார் கைது செய்துள்ளனர்.

களியக்காவிளை போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மகேந்த் தலைமையில் போலீசார் அதங்கோடு பகுதியில் ரோந்த் பணியில் ஈடுபட்டு கொண்டு இருந்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமான முறையில் இரண்டு வாலிபர்கள் நின்று கொண்டு இருந்தனர். அவர்களை பிடித்து விசாரித்ததில் அவர்களிடம் 25 -கிராம் அளவிலான கஞ்சா பொட்டலங்கள் இருந்தது தெரிய வந்தது. இரண்டு பேரும் நித்திர விளை கல்வெட்டான் குழி பகுதியை சார்ந்த பிரைட் மகன் அல்பிட்டோ ( 19) ஜெஸ்டின் ராஜ் மகன் ஜெபின் ராஜ், (20) இருவரும் பெயிண்டர் வேலை செய்து வருகின்றனர். இவர்கள் இருவர் மீது நித்திரவிளை காவல் நிலையத்தில் பல்வேறு வழக்குகள் உள்ளது. இருவரையும் களியக்காவினை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோவை மாவட்ட பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவை 49 ஆம் ஆண்டு தொடக்க விழா



கோவை, ஜன.30-
கோவை மாவட்டம் போத்தனூர் ரயில்வே மனமகிழ் மன்றத்தில் கோவை மாவட்ட பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவை 49 ஆம் ஆண்டு தொடக்கம்,மார்க்சிய மாமுனிவர் குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு நிறைவு இன்ப தமிழ் இலக்கிய திருவிழாவும் இலக்கியப் பேரவை ச அப்பாவு அய்யா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் 49 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு நூல் வெளியீடு,பேச்சுப்போட்டி, பல்துறை சான்றோர்காண விருதரங்கம் நடைபெற்றது. இதில் பொறியியல் கருணாநிதி வரவேற்பு உரை ஆற்றினார்,பூபதி அய்யா,பரமேசுவரன் சிவசாமிதமிழன், கோபாலன், ஜெகநாதன்,நான்சி கோமகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், நிழலோவியத்திறப்பு சாக்கிய முனிராசு, முனைவர் அரங்க கோபால்,பாட்டரங்கம் வீரமணி,கண்ணையன்,சிறப்புரை நற்றமிழ் நாவுக்கரசி ஆதிரா முல்லை, நூல் திறனாய்வரங்கம் மாரியப்பன் அய்யா,முனைவர் தமிழ் துறை உதவி பேராசிரியை ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி சி செந்தில் வடிவு,ஏற்புரை மாரியப்பன் அய்யா,நூல் வெளியீட்டு அரங்கம் வாழ்வியல் நிசங்கள் எனும் நூல் குண சுந்தரி, நூல் வெளியிடுபவர் மகாலிங்கம்,கே.எசுசி கலை அறிவியல் கல்லூரி கம்ப்யூட்டர் சயின்ஸ் சி கோமதி,ஜான்சி ராணி கீதா கலைவாணி,நூல் திறனாய்வுறை அம்சவேணி,ஏற்புரை குணசுந்தரி,ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி விருது வழங்கினர்.இந்நிகழ்வில் 24 நபர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.இதில் கவிஞர் பொன் சிங் பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கினார் மற்றும் உண்மை உறங்கும் நேரம்,புத்தகங்கள் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் பல்கலைக்கழகம் பங்கேற்ற சர்வதேச தூய மற்றும் பசுமை ஆற்றல் தினம்




ஸ்ரீவில்லிபுத்தூர், ஜன.30-
ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் பல்கலைக்கழகம், கிரீன் ஆர்மி கிளப், இசிஇ மாணவர்கள் இணைந்து, தென்காசி மாவட்டம், வரகனூர் பஞ்சாயத்து, குண்டம்பட்டி கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளியில் சர்வதேச தூய மற்றும் பசுமை ஆற்றல் தின விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

பஞ்சாயத்து செயலர் செல்வராஜ் வரவேற்புரை வழங்கினார். துணைவேந்தர் முனைவர் எஸ். நாராயணன், பதிவாளர் முனைவர்ஃவி. வாசுதேவன்,ஹெய்மபிக் ஈகோடெக் பௌண்டேஷன் நிறுவனர் அன்பழகன் மற்றும் வரகனூர் ஊராட்சி மன்ற தலைவர் ம. சுப்புலட்சுமி வாழ்த்துரை வழங்கினர். மாணவர்கள், காலநிலை பருவ மாற்ற தாக்கத்தை குறைப்பதிலும், சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் முக்கியத்துவம் பற்றி விளக்கினர். மேலும்

காற்றாலை , சூரிய ஒளிஆற்றல் மற்றும் மின்சார வாகனங்கள் குறித்த தகவல்களை பகிர்ந்ததோடு, பள்ளி குழந்தைகளுக்காக விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள், பழமரக் கன்றுகள் வழங்கினர். கிளப் ஒருங்கிணைப்பாளர் முனைவர் கி. செல்வராணி மற்றும் பேராசிரியர் முனைவர் மு. ஜெயந்தி, நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்து விளக்கி, நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எஸ். இந்துஜா நன்றியுரை வழங்கினார். பள்ளி மாணவர்கள், பெண்கள் மற்றும் கிராம மக்களும், பங்கேற்று, பயனடைந்தனர்

# கோவையில் சர்வதேச ஜவுளி தொழில் மாநாடு 360 : ரூ.1,100 கோடிக்கும் அதிகமான நலத்திட்டங்களை வழங்கினார் உதயநிதி ஸ்டாலின்



கோவை, ஜன.30-

கோவை கொடிசியா வளாகத்தில் நடைபெற்ற முதலாவது சர்வதேச ஜவுளி தொழில் மாநாடு 360 நிகழ்வில்,தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு ,ஜவுளித் தொழிலை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு பிரம்மாண்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தமிழகத்தில் இருந்து ஜவுளி ஏற்றுமதியில் முத்திரை பதித்த நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில்'சிறந்த ஏற்றுமதியாளர் விருதுகள்' வழங்கப்பட்டன.

இதில் சிறு,குறு,நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்கள் என 5 பிரிவுகளில் முதலிடம் பிடித்த 5 நிறுவனங்களுக்கு தலா ரூ.2 லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழ்களைத் துணை முதலமைச்சர் வழங்கினார். மேலும்,10 நிறுவனங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.பழைய நூற்பு இயந்திரங்களை நவீனப்படுத்தப் பெறப்படும் வங்கி கடன்களுக்கு 2% வட்டி மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், ஒரு நூற்பாலைக்கு ரூ.11.70 லட்சம் வட்டி மானியத்திற்கான ஆணை வழங்கப்பட்டது.அதேபோல்,சாதாரண விசைத்தறிகளை நவீன ரேப்பியர் தறிகளாக மாற்றவும், புதிய தறிகள் வாங்கவும் 12 விசைத்தறியாளர்களுக்கு மொத்தம் ரூ.67.49 லட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

துணி நூல் பதனிடும் பிரிவில் புதிய ஆலைகள் தொடங்கவும்,விரிவாக்கம் செய்யவும் முன்வந்த 3 நிறுவனங்களுக்கு மூலதன முதலீட்டு மானியமாக சுமார் ரூ.1,092 கோடி வழங்க அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டது.இது ஜவுளித் துறையில் மிகப்பெரிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.அகலமான துணி அச்சிடும் இயந்திரங்கள் வாங்கிய 2 நிறுவனங்களுக்கு ரூ.38.35 லட்சம் மானியம்.ஆயத்த ஆடை பிரிவில் தானியங்கி துணி வெட்டும் இயந்திரம் வாங்கிய 3 நிறுவனங்களுக்கு ரூ.142.94 லட்சம் மானியம்.

பல்லவாடா தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா நிறுவனத்திற்கு மாநில அரசின் பங்காக ரூ.1.30 கோடி மானியம், கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் இணைந்து மேற்கொள்ளும் 6 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூ.138.32 லட்சம் நிதியுதவி.இந்த மாநாட்டின் மூலம் கோவையின் ஜவுளித் தொழில் உலகத்தரத்திற்கு உயரும் என்றும்,குறிப்பாகச் செயற்கை இழைகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளி பிரிவில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழும் என்றும் துணை முதலமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார்.இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள்,அரசு உயர் அதிகாரிகள் மற்றும் ஜவுளித் துறை சார்ந்த பலர் கலந்து கொண்டனர்.

## புதுக்கடை அருகே கொத்தனார் தற்கொலை

**புதுக்கடை, ஜன.30–**

**புதுக்கடை அருகே உள்ள மணியாரம்குன்று பகுதியை சேர்ந்தவர் ஜெயக்குமார் (54). கொத்தனார் வேலை செய்து வந்தார். இவருக்கு மது குடிக்கும் பழக்கம் இருந்தது. இதனால் கடந்த சில மாதங்களாக அவர் சரியாக வேலைக்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்து வந்துள்ளார். சம்பவ தினம் ஜெயக்குமார் வேலைக்கு சென்றுள்ளார். மாலையில் வீட்டிற்கு வந்தவர் படுக்கை அறைக்கு சென்றார். அதன் பிறகு வெளியே வரவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த குடும்பத்தினர் சென்று பார்த்தபோது, அங்கு ஜெயக்குமார் தூக்கில் பிணமாக தொங்கும் நிலையில் காணப்பட்டார். உடனடியாக அவரது மனைவி லதா (47) என்பவர் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். போலீசார் சம்பவ இடம் சென்று ஜெயக்குமார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.**

## நல்லம்பள்ளி ஒன்றிய தவெக பொறுப்பாளர் கட்சியில் இருந்து விலகி எம்பி முன்னிலையில் திமுகவில் இணைந்தார் !



தருமபுரி, ஜனவரி. 30–

தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கி.ஜெட்டிஅள்ளி ஊராட்சி தேங்காமரத்துப்பட்டி கிராமத்தை சேர்ந்த முருகன் தவெக கட்சியின் ஒன்றிய பொருளாளர், கட்சியில் இருந்து விலகி தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆ .மணி எம்பி முன்னிலையில் திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார். இந்த நிகழ்வில் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ஏ .எஸ். சண்முகம், தருமபுரி நகர கழக பொறுப்பாளர்கள் நாட்டான் மாது, கௌதம், பொதுக்குழு உறுப்பினர் துரைசாமி, தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் ரகு, ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தமிழ் நீதி மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# ‘உலகம் உங்கள் கையில்’ திட்டத்தில் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி

## தென்காசி கலெக்டர் கமல்கிஷோர் வழங்கினார் !!



தென்காசி, ஜன.30-

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், “ உலகம் உங்கள் கையில் ” திட்டத்தின் கீழ் 6 தனியார் கல்லூரிகளில் பயிலும் 739 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணியை வழங்கினார். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உலகம் உங்கள் கையில் என்ற திட்டத்தின் வாயிலாக மாணவர்களின் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் வகையில் 10 இலட்சம் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை சென்னை நந்தனம் வர்த்தக மையத்தில் தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, இன்றைய தினம் தென்காசி மாவட்டத்தில் கடையம் எவர்கிரீன் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் 05 மாணவ, மாணவிகளுக்கும், பாவூர்சத்திரம் எம்.எஸ்.பி.வி.எல். பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் 329 மாணவ, மாணவிகளுக்கும், வெய்க்காலிப்பட்டி புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 119 மாணவ, மாணவிகளுக்கும், நல்லூர் ஜெயராஜ் அன்னபாக்கியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 228 மாணவ, மாணவிகளுக்கும், சுரண்டை ஜெய்குரு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் 22 மாணவ, மாணவிகளுக்கும், ஆலங்குளம் அண்ணாசாமி ராஜம்மாள் நர்சிங் கல்லூரியில் பயிலும் 36 மாணவ, மாணவிகளுக்கும் என மொத்தம் 739 மாணவ, மாணவியர்களுக்கு மடிக் கணிணி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மடிக்கணிணியை பொழுதுபோக்கு சாதனமாக உபயோகிக்காமல் யு.பி.எஸ்.சி, ஜே..இ இது போன்ற பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு பயன்படுத்திக்கொள்ள தெரிவித்தார். இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி.காவேரி சீனித்துரை, கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் (திருநெல்வேலி மண்டலம்) முனைவர்.விக்டோரியா தங்கம், கல்லூரி முதல்வர்கள் முனைவர் ஏஞ்சல் ராணி, முனைவர் வில்சன், முனைவர் சிவசங்கரி மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## காரிமங்கலம் வட்டாரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தினை அமலாக்க வேண்டி திண்ணை பிரச்சாரம்



**தருமபுரி, ஜனவரி. 30–**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தினை தொடர்ந்து அமுலாக்க வேண்டி தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் வட்டாரம் பைசுஅள்ளி கிராம ஊராட்சின் குக்கிராமங்களான பைசுஅள்ளி, பள்ளத்தில் கொட்டாய், மாட்டலாம்பட்டி, சின்னமாட்டலாம்பட்டி, சட்ட கல்லூரி அருகில், சட்ட கல்லூரி மாணவர் விடுதி அருகில் ஆகிய இடங்களில் பிரச்சாரம் செய்தனர். தருமபுரி மாவட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்ட தொழிலாளர் சங்க ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்கள் பைசுஅள்ளி ஜி. மாதையன், கெங்கு செட்டிப்பட்டி ரத்தினவேல், கதிர்நாய்க்கன அள்ளி வைகுந்தன் ஆகியோர் கலந்துக் கொண்டு பிரச்சாரம் செய்தனர்,**



**தருமபுரி குமாரசாமி பேட்டை அரிச்சந்திரன் தெருவிலுள்ள ஸ்ரீ சக்தி மாரியம்மன் திருக்கோயிலில் மார்கழி மாத சிறப்பு பூஜையில் கலந்து கொண்டு பஜனை பாடல்கள் பாடிய அனைவருக்கும் தருமபுரி குமாரசாமிபேட்டை ஒன்பதாவது வார்டு திமுக நகர மன்ற உறுப்பினர் அ. மாதேஸ்வரன் பரிசுகளை வழங்கி பாராட்டினார். இதில் அரிச்சந்திரன் தெருவில் உள்ள பொதுமக்கள் கலந்து கொண்டனர்.**

## வள்ளலார் நினைவு தினம் : 1ந்தேதி மதுக்கடைகள் மூடல்

விருதுநகர், ஜன.30-

வள்ளலார் இராமலிங்கனார் நினைவு தினமான 01.02.2026 அன்று ஒரு நாள் மட்டும் FL-1 / FL-2 / FL-3 / FL-3A / FL-3AA / FL-4A மற்றும் FL-11 ஆகிய மதுபான உரிம ஸ்தலங்களை தற்காலிகமாக மூடுவதற்கு உத்தரவிடப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா கூறினார்.

விருதுநகர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் FL-1 / FL-2 / FL-3 / FL-3A / FL-3AA / FL-4A மற்றும் FL-11 ஆகிய மதுபான உரிம ஸ்தலங்களை 2003-ம் ஆண்டைய தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகளின் விதி 12 துணை விதி (1) The Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1981-ன்படி வள்ளலார் இராமலிங்கனார் நினைவு தினமான 01.02.2026 ஞாயிற்றுக் கிழமை அன்று (ஒரு நாள் மட்டும்) தற்காலிகமாக மூடுவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, உத்தரவினை மீறி செயல்படும் டாஸ்மாக் நிறுவனப் பணியாளர்கள் FL-1 / FL-2 / FL-3 / FL-3A / FL-3AA / FL-4A மற்றும் FL-11ஆகிய மதுபான ஸ்தலங்களின் உரிமதாரர்களின் மீது (1) The Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1981-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தெரிவித்துள்ளார்.

## பென்னாகரம் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் தேசியக்கொடி அவமதிப்பு



தருமபுரி, ஜனவரி. 30-

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அரசு ஆண்கள் பள்ளியில் தேசியக் கொடி அவமதிக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது. பென்னாகரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 500 மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்த பள்ளியில் கடந்த 26 – ம் தேதி குடியரசு தின விழா பள்ளியில் கொண்டாடப்பட்டது. அதன் காரணமாக தேசிய கொடியேற்றப்பட்டது. ஆனால் மாலை 5 மணிக்கு மேல் தேசிய கொடியை இறக்கி விட வேண்டும். ஆனால் யாரும் தேசியக் கொடியினை இறக்கவில்லை. இரவு முழுவதும் கம்பத்திலேயே இருந்துள்ளது. இந்த நிலையில் நேற்று காலை பள்ளியில் நடை பயிற்சிக்கு சென்றவர்கள் தேசியக்கொடி இறக்கப்படாமல் இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். அதன் பின்னர் பள்ளி நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்துள்ளனர். அதன் பின்னரே காலை 9 மணியளவில் தேசியக்கொடி இறக்கப்பட்டுள்ளது. மேலும் இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், பள்ளிகளில் வாரத்தின் முதல் நாளான திங்கட்கிழமைகளில் தேசியக்கொடி ஏற்றப்படுவது வழக்கம். ஆனால் பென்னாகரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றும் லோகநாதன் கடந்த இரண்டு ஆண்டுகளாக வாரத்தின் முதல் நாளான திங்கட்கிழமைகளில் இதுவரை தேசிய கொடி ஏற்றப்படவில்லை. மேலும் சுதந்திர தின மற்றும் குடியரசு தின நாட்களில் கொடிகள் ஏற்றப்பட்டாலும் அவமதிக்கப்படும் செயல் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது என கூறினர். இது குறித்து அதிகாரிகள் முறையாக விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினார்கள்.

# உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் தனியார் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை குமரி மாவட்ட கலெக்டர் வழங்கினார்



நாகர்கோவில், ஜன.30-

நாகர்கோவில் பொன் ஜெஸ்லி பொறியியல் கல்லூரியில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின்கீழ் தனியார் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமை வகித்து பேசியதாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 12 அரசு கல்லூரிகள் மற்றும் 17 அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் 2,182 மாணவர்களுக்கு முதற்கட்டமாக அரசின் மடிக்கணினிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

அதன் ஒருபகுதியாக அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டத்திற்குட்பட்ட லாரன்ஸ் டெக்னிக்கல் டிரெயினிங் சென்டர் 25, பொன் ஜெஸ்லி கல்லூரி 263, ஜெயசேகரன் காலேஜ் ஆப் நர்சிங்கோம் 47, ஸ்ரீ வைகுண்டர் பாலிடெக்னிக் கல்லுரி 28, ஞானதாசன் பாலிடெக்னிக் கல்லுரி 33, சி.எஸ்.ஐ மோட்டார் மெக்கானிக் டிரெயினிங் இன்ஸ்டிடியூட் 7, கிராஸ் காலேஜ் ஆப் நர்சிங் 32, சால்வேஷன் ஆர்மி காலேஜ் ஆப் நர்சிங் 47, ஜெயமாதா பொறியியல் கல்லூரி 104 என மொத்தம் 9 தனியார் கல்லூரிகளில் பயிலும் 586 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது. என கூறினார். நிகழ்ச்சியில் நாகர்கோவில் மேயர் மகேஷ், பொன் ஜெஸ்லி பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் நடராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மண்டல தலைவர் செல்வகுமார், பொன் ஜெஸ்லி பொறியியல் கல்லூரி துணை முதல்வர், பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## சாத்தூரில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா நேரில் சென்று ஆய்வு



விருதுநகர், ஜன.30-

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் எஸ்.ஆர்.என்.எம்.பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெற "உலகம் உங்கள் கையில்" என்னும் அறிவுசார் கருப்பொருளின் கீழ் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு, இலவச மடிக்கணினிகள் வழங்கப்படும் நிகழ்வினை முன்னிட்டு, மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சாத்தூர் வட்டம், வெங்கடாசலபுரத்தில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள குடும்பங்களை நேரடியாக அவர்களின் இல்லங்களுக்கே சென்று சந்தித்து, உரிய பயிற்சி வழங்கப்பட்ட தன்னார்வலர்கள் வாயிலாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட பல்வேறு அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளை கண்டறிந்து பொது மக்களுக்கான எதிர்காலத்திட்டங்களை செயல்படுத்தவும் தொடங்கப்பட்ட உங்க கனவ சொல்லுங்க திட்டத்தின் படிவங்கள் வழங்கப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வெங்கடாசலபுரத்தில் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடையினை, மாவட்ட ஆட்சியர் நேரில் சென்று பார்வையிட்டு, பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, சாத்தூர் நகராட்சி, தில்லை நகரில் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல்-2026 னை முன்னிட்டு, வாக்காளர் வரைவுப் பட்டியலில் 18-வயது பூர்த்தியடைந்த புதிய வாக்காளர்களை சேர்க்கும் விதமாக, படிவம்-6 வழங்கப்பட்டு வரும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில், வட்டாட்சியர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ரியல் எஸ்டேட் துறைக்கு தனி அமைச்சகம் வேண்டும்

## ரியல் எஸ்டேட் தொழில் செய்வோர் நலச் சங்க கூட்டத்தில் தலைவர் பொன்குமார் கோரிக்கை !!



விருகம்பாக்கம், ஜன.30-

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்காற்றக் கூடியதும், பெருவாரியான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடியதுமான ரியல் எஸ்டேட் துறையை முறைப்படுத்தி, ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்களைப் பாதுகாத்திடும் நோக்கோடு ரியல் எஸ்டேட் தொழில் செய்வோர் நலச்சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் விருகம்பாக்கம் தொகுதி நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்ச்சி கே.கே நகரில் தொகுதி தலைவர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. தொகுதி செயலாளர் பா.மகேஸ்வரன் வரவேற்று பேசினார். தொகுதி பொருளாளர் திருமுருகன், மாவட்ட அமைப்பாளர்கள் பாஸ்கரன், தக்ஷிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவரும், ரியல் எஸ்டேட் தொழில் செய்வோர் நல சங்கத்தின் நிறுவனத் தலைவருமான பொன்குமார் கலந்து கொண்டு தொகுதி நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். விருகம்பாக்கம் சட்டப்பேரவை உறுப்பினர் பிரபாகர்ராஜா கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். சங்கத்தின் மாநில செயலாளர் குமார், துணைத் தலைவர் ரஜினி ராஜ், இணை செயலாளர் நாகராஜ், அமைப்பு செயலாளர்கள் சுரேஷ் குமார், அன்னலட்சுமி, சென்னை மண்டல தலைவர் வில்லியம்ஸ், ஆர்.ஆர். பிரியாணி நிறுவனர் தமிழ்ச்செல்வன், விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் சுந்தராஜ் உட்பட பலர் உரையாற்றினர். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்காற்றக்கூடிய இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் துறைக்கு மத்தியிலும், மாநிலத்திலும் தனி அமைச்சகத்தை ஏற்படுத்திட வேண்டும். ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்களை அரசு அங்கீகரித்து அடையாள அட்டை வழங்கிட வேண்டும். அந்தத் தொழிலாளர்களை அமைப்புசாராத் தொழிலாளர்கள் பட்டியலில் இணைத்து நல வாரிய பயன்கள் பெற்றிட ஏற்பாடு செய்திட வேண்டும். இந்த துறைக்கு 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ள ஜிஎஸ்டியை அடியோடு நீக்கிட வேண்டும். வீட்டு மனை வரைபட அனுமதி, பத்திரப்பதிவு போன்றவற்றை ஆகியவற்றை எளிமைப்படுத்திட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகள் இந்த கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

# ஈரோடு தொழிலதிபர் டாக்டர் எஸ் கே எம் மயிலானந்தத்துக்கு பத்ம பூசன் விருது

ஈரோடு, ஜன. 30–
எஸ் கே எம் நிறுவனங்களின் தலைவரும் உலக சமுதாய சேவா சங்க தலைவருமான சமூக ஆர்வலர் டாக்டர் எஸ் கே எம் மயிலானந்தன். 2013ம் ஆண்டில் இந்தியாவின் மிக உயரியவிருதான பத்ம ஸ்ரீ விருது இவராற்றியசமூகபணிகளுக்காக வழங்கப்பட்டது.
தமிழ்நாட்டில் ஈரோடுமாவட்டத்தில் ஓர் ஏழ்மையானவிவசாயக் குடும்பத்தில் 1945ம் ஆண்டு ஜூன் 18ம் தேதி பிறந்த மயிலானந்தன் தனது பள்ளி இறுதி வகுப்பு வரைமட்டுமே கல்விபயின்றார்.
அவர் 1983ம் ஆண்டில் கோழிப்பண்ணையாளர்கள் நலச் சங்கத்தைத் தொடங்கி அதன் நிறுவனத் தலைவரானார். கோழிநண்பன் என்ற கோழி வளர்ப்பு குறித்த மாத இதழின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் ஆனார். குழந்தைகளிடையேநிலவும் ஊட்டச் சத்து குறைபாட்டை ஒழிக்க தமிழக அரசின் மதிய உணவு திட்டத்தில் முட்டையையும் கொண்டுவந்ததில் அவர் முக்கிய பங்கு வகித்தார்

மயிலானந்தன் . ஈரோடுமாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் தலைவராகப் பணியாற்றிவருகிறார். இந்த மையத்திற்கு ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான கிராமபஞ்சாயத்துகளில் துணை மையங்களும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் மன்றங்களும் உள்ளன. இந்தமையம் நுகர்வோரின் பயன்பாட்டிற்காக"குடிமக்கள் சாசனம்"குறித்த புத்தகம் வெளியிட்டுள்ளது.
ஈரோடுபாதுகாப்புமையம் ஆற்றியசேவைகளைபாராட்டி இந்தியஅரசு 1993ம் ஆண்டு"தேசிய சிறந்த நுகர்வோர் பாதுகாப்பு மையம்"விருது மற்றும் ரூ.50000 பரிசுத்தொகையையும் வழங்கியது குறிப்பிடத்தக்கது.






# மேட்டுப்பாளையம் நகர அதிமுக சார்பில் கட்சித் தலைவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் முப்பெரும் விழா



கோவை, ஜன. 30–
கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் பகுதியில் அதிமுக நகர அம்மா பேரவை மற்றும் நகர எம்ஜிஆர் மன்றம் சார்பில் தமிழக முன்னாள் முதல்வர்கள் அதிமுக நிறுவனத் தலைவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா மற்றும் புரட்சித் தமிழர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார், ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவிற்கு நகர அம்மா பேரவை செயலாளர் வெள்ளிங்கிரி, நகர எம்.ஜி.ஆர் மன்ற தலைவர் எல் எஸ்.புரம் ரவி, நகரத் துணைச் செயலாளர் பாலன் தலைமையும், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் நாசர், மேட்டுப்பாளையம் நகர செயலாளர் வான்மதி சேட் முன்னிலையும் வகித்தார்கள். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாவட்ட செயலாளர் பி.ஆர்.ஜி.அருண்குமார் எம்.எல்.ஏ., கழக அமைப்புச் செயலாளர் ஏ.கே.செல்வராஜ் எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள். உடன் முன்னாள் எம்.எல்.ஏ., ஓ.கே.சின்ராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் கந்தசாமி, வழக்கறிஞர் பிரிவு செயலாளர் கோபால கிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் ஜீவானந்தம், மகளிர் அணி செயலாளர் டி.விமலா, பொதுக்குழு உறுப்பினர் மணிமேகலை, சிறுமுகை நகரச் செயலாளர் ரவிக்குமார், காரமடை நகர செயலாளர் ஆறுமுகசாமி, நகரப் பொருளாளர் விஜய் பிரபு, மேட்டுப்பாளையம் ஐ.டி.விங் செயலாளர் பிரவீன் ஆகியோர் இருந்தனர்.

# மயிலாடி றிங்கல்தெளபே மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் நிலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா

## தமிழ்நாடு மாநில உணவு ஆணைய தலைவர் சுரேஷ் ராஜன் வழங்கினார்!!



கன்னியாகுமரி, ஜன. 30–
குமரி மாவட்டம் மயிலாடி றிங்கல்தெளபே மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் நிலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது.
விழாவிற்கு பள்ளித்தாளாளர் ஜெரோம் எமில் தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியர் புஷ்பலதா, மயிலாடி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் சாய்ராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி தலைமை ஆசிரியர் பெனிலாஹேன் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு மாநில உணவு ஆணைய தலைவர் சுரேஷ் ராஜன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு தமிழக அரசின் விலை இல்லா நிதி வண்டியை வழங்கி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஆசிரியர் மன்ற செயலாளர் ஜான் ஸ்டீபன், கவுன்சிலர் சிவசங்கர் திமுக நிர்வாகிகள் ஆனந்த், இயேசு பாதம், பொன்னம்மாள், டேவிட், மாதவன் பிள்ளை, கண்ணன், முருகன் மற்றும் இருபால் ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருவனந்தபுரம் இரட்டை ரயில் பாதை பணிகள் : நுள்ளிவிளையில் தண்டவாளம் அமைக்கும் பணி தீவிரம்



இரணியல்.ஜன.30–
திருவனந்தபுரம் இரட்டை ரயில் பாதை பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. நுள்ளிவிளை பகுதியிலும் தண்டவாளம் அமைக்கும் பணிகள் நடக்கிறது. இதற்காக தோட்டியோடு - திங்கள்நகர் மாநில நெடுஞ்சாலை நுள்ளிவிளையில் அமைந்துள்ள ரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்தும் பணிகள் இன்று காலை தொடங்கியது.
இதற்கு அந்தோனி முத்து தலைமையில் சிலர் எதிர்ப்பு தெரிவித்து கோஷம் எழுப்பினர் இரணியல் போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தோனி அம்மாள் மற்றும் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர் உடன்பாடு ஏற்படாத நிலையில் அந்தோனி முத்து உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர் முக்கிய சாலை என்பதால் மாற்றுப் பாதையாக பேயன்குழி - வடக்கு நுள்ளிவிளை 4 வழிச்சாலை செல்ல இரட்டைக்கரை கால்வாய் சாலை வழியாக கொன்னக்குழிவிளை, பரசேரி ஜங்ஷன் செல்ல வேண்டும்.
மறு மார்க்கமாக இதே சாலையை பயன்படுத்த வேண்டும் என போக்குவரத்து காவல்துறை அறிவுறுத்தி உள்ளது. அதற்கான சோதனை ஓட்டமும் கடந்த சில நாட்களாக நடந்தது.
இந்த நிலையில் ராட்சச ஹிட்டாச்சி கொண்டு பாலம் உடைக்கும் பணி தொடங்கியது. இதற்கு ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்ததால் அங்கு பரபரப்பு நிலவியது. பாலம் உடைக்கும் பணி தொடங்கியதால் நுள்ளிவிளை நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது. இரணியல் ஜங்சன், மடவிளாகம் ஜங்ஷன், கண்டன்விளை இறக்கம் ஜங்ஷன் பகுதிகளிலிருந்து வாகனங்கள் மாற்றுப்பாதையில் திருப்பி விடப்பட்டு உள்ளன.
6 சக்கரம் வரை உள்ள அரசு பஸ்கள் மற்றும் இலகு ரக வாகனங்கள் பேயன்குழி பாலத்தில் இருந்து வடக்கு நுள்ளிவிளை 4 வழி சாலை வழியாக சென்று வருகின்றன. இந்த போக்குவரத்து மாற்றத்திற்கு ஓட்டுனர் பொது மக்கள் என அனைத்து தரப்பினரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட நிர்வாகம், ரயில்வே துறை, போக்குவரத்து காவல்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# கன்னியாகுமரியில் போக்குவரத்து போலீசார் இருசக்கர வாகனத்தில் விழிப்புணர்வு பேரணி!




கன்னியாகுமரி,ஜன.30–
கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் விபத்துகளை குறைக்கும் முன்னெடுப்பாக பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதன் தொடர்ச்சியாக நேற்று கன்னியாகுமரி போக்குவரத்து போலீசார் இருசக்கர வாகனத்தில் ஹெல்மட் அணிந்தபடி 100 இருசக்கர வாகனங்கள் பங்கு பெற்ற
"நோ ஹெல்மட் நோ என்றி" என்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு பேரணியை காவல் துணை கண்காணிப்பாளர் ராஜா துவக்கி வைத்தார். கன்னியாகுமரி போக்குவரத்து ஆய்வாளர் செல்லதுரை பேரணியில் சிறப்புரை வழங்கினார். இந்த விழிப்புணர்வு பேரணியானது கன்னியாகுமரி ரவுண்டானாவில் இருந்து துவங்கி விவேகானந்தபுரம், பழத்தோட்டம், மகாதானபுரம் வழியாக ஜீரோ பாயிண்ட் -இல் நிறைவடைந்தது. இந்தப் பேரணியில் காவல்துறையினரும் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# தேங்காபட்டணம் அருகே மீனவரை தாக்கி ரூ.80 ஆயிரம் பறித்த 5 பேர் மீது வழக்கு

புதுக்கடை, ஜன.30–
தேங்காப்பட்டணம் அருகே உள்ள இனயம் சுனாமி காலனியை சேர்ந்தவர் வெனிஸ் ராஜ் (25). மீனவரான இவருக்கும் தேங்காப்பட்டணம் பகுதியை சேர்ந்த அஜித் (23), மோனிஷ் (25) ஆகியோருக்கும் முன் விரோதம் இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் சம்பவத்தன்று வெனீஸ்ராஜ் தேங்காப்பட்டணத்தில் உள்ள பெட்ரோல் பங்க் அருகே நின்று கொண்டிருந்தார். அப்போது அஜித், மோனிஷ் மற்றும் கண்டால் தெரியும் 3 பேர் என 5 நபர்கள் சேர்ந்து வெனிஸ் ராஜை சரமாரியாக தாக்கி அவரிடம் இருந்து 80 ஆயிரம் ரூபாயை பறித்து விட்டு கொலை மிரட்டல் விடுத்து சென்றனர். தாக்குதலில் காயமடைந்த வினிஷ் ராஜ் குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். இது குறித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் அஜித், மோனிஷ் உட்பட 5 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



ஈரோடு சம்பத்நகரை சேர்ந்த சமூக சேவகர் ரவீந்திரனின் சமூக சேவையை பாராட்டி தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் சதீஸ் பொன்னாடை அணிவித்து கௌரவப் படுத்தினார் . அருகில் ஆட்சித் தலைவர் துணைவியார் லாவண்யா சதீஷ் உள்ளார்.

# கன்னியாகுமரி சன்னதி தெருவில் ஆக்கிரமிப்புகள் அகற்றம்



கன்னியாகுமரி, ஜன.30–
கன்னியாகுமரி சன்னதி தெருவில் பகவதி அம்மன் கோவில் தேவசம்போர்டு நிர்வாகத்துக்கு சொந்தமான கன்னியம்பலம் மண்டபம் அருகில் உள்ள இடத்தில் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த விக்ரம் என்பவர் நடத்தி வந்த கடையின் முன்பக்கத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி இருந்தார்.
இந்த ஆக்கிரமிப்பை அகற்ற கோரி மதுரை ஐகோர்ட்டு கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி தேவசம்போர்டு நிர்வாகத்துக்கு உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த இந்த கடையின் கட்டிடத்தை நகராட்சி நிர்வாகம் நேற்று ராட்சத ஜே.சி.பி. எந்திரம் மூலம் இடித்து அகற்றும் பணியை மேற்கொண்டது.
இந்த ஆக்கிரமிப்பு அகற்றும் பணி கன்னியாகுமரி கராட்சி ஆணையாளர் கண்மணி, குமரி மாவட்ட கிருக்கோவில்களின் இணை ஆணையர் ஜான்சி ராணி ஆகியோரின் அறிவுரையின் பேரில் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் ஷேக் அப்துல்காதர், சுகாதார ஆய்வாளர் ந்தோணி, பகவதி அம்மன் கோவில் மேலாளர் ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் அகற்றப்பட்டது. பலத்த பாலீஸ் பாதுகாப்புடன் ஆக்கிரமிப்பு அகற்றும் பணி ந்தது. இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# குழித்துறையில் கல்லூரி மாணவிகளுக்கு விஜய்வசந்த் எம்பி மடிக்கணினி வழங்கினார்



மார்த்தாண்டம், ஜன.30–
தமிழக அரசு சார்பில் உலகம் உங்கள் கையில் என்ற திட்டத்தின் அடிப்படையில் தமிழகம் முழுவதும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல இந்து அறநிலை துறைக்கு சொந்தமான குழித்துறை ஸ்ரீ தேவிகுமாரி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் விழா கல்லூரி வளாகத்தில் வைத்து நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் பிந்துஜா தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த், எம்பி, கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மாணவிகளுக்கு மடிக்கணினியை வழங்கினார்.
நிகழ்ச்சியில் விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் தாரகை கத்பட், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் உறுப்பினர் ரத்னகுமார், மாநில செயலாளர் வழக்கறிஞர் சினிவாசன், குமரி மேற்கு மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி லைலா, மேல்புறம் வட்டார காங்கிரஸ் கட்சி தலைவர் ரவி சங்கர், முன்னாள் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் திபாகர், நாகர்கோவில் மாநகர மாவட்ட தலைவர் நவீன்குமார் மற்றும் மாணவர்கள் பேராசிரியர்கள் உள்ளிட்ட கலந்து கொண்டார் .

# தருமபுரி அரசு கலைக் கல்லூரி மாணவர் மாநில அளவிலான மல்யுத்த போட்டியில் வெண்கல பதக்கம்




தருமபுரி, ஜனவரி. 30–
தருமபுரி அரசு கலைக்கல்லூரி மாணவர் ஆர் . சுரேந்திரா மாநில அளவிலான மல்யுத்த போட்டியில் மூன்றாம் இடம் பிடித்து வெண்கல பதக்கம் வென்றுள்ளார். பாதகத்தை வென்ற மாணவனை கல்லூரி முதல்வர் கோ. கண்ணன் பாராட்டினார்.
தமிழ்நாடு மல்யுத்த சங்கத்தின் சார்பில் 12 – வது மாநில அளவிலான 20 வயதுக்கு உட்பட்ட ஆடவர் மற்றும் மகளிருக்கான மல்யுத்த போட்டிகள் சேலம் மாவட்டம் மேட்டூரில் 24–01–2026 மற்றும் 25–01–2026 ஆகிய நாட்களில் நடைபெற்றது.
அதில் தருமபுரி அரசு கலைக் கல்லூரி வரலாற்று துறை மூன்றாம் ஆண்டு மாணவர் ஸி. சுரேந்திரா கலந்து கொண்டு 67 கிலோ எடை பிரிவில் மாநில அளவில் மூன்றாம் இடம் பிடித்து வெண்கல பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். மல்யுத்த போட்டியில் மாநில அளவில் பதக்கம் வென்ற மாணவர் ஆர் . சுரேந்திரா– க்கு கல்லூரியில் நடைபெற்ற விழாவில் கல்லூரி முதல்வர் கோ. கண்ணன் தகுதிச் சான்றிதழ் ,வெற்றி கோப்பை, பதக்கங்களை வழங்கி வாழ்த்தினார்.
இந்நிகழ்வில் கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் கு. பாலமுருகன், வரலாற்று துறை தலைவர் றி.க்ஷி. சாரதி மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவனுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். இந்நிகழ்வில் அனைத்து துறை பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், கௌரவ விரிவுரையாளர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தங்களது வாழ்த் துக்களை தெரிவித்தனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் இது வரை 11,28,546 நபர்கள் மக்களைத்தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் பயன்!

## கலெக்டர் மணிஷ் நாரணவரே தகவல்!!




திருப்பூர், ஜனவரி.30–
திருப்பூர் மாவட்டத்தில் இது வரை 11,28,546 நபர்கள் மக்களைத்தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளார்கள். இது குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தெரிவித்ததாவது,
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், வட்டம் சாரா மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள், மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள், காசநோய் மருத்துவமனை, சானடோரியம், தொழுநோய் மருத்துவமனை மற்றும் மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு மனநலம் காப்பகம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத்திட்டம் ஆகியவைகள் மூலம் பொது மக்களுக்குத் தேவையான மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. கலைஞர் வருமுன் காப்போம் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், நம்மை காக்கும் 48 இன்னுயிர் காப்போம் திட்டம் போன்ற திட்டங்கள் திருப்பூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் திருப்பூர் மாவட்டத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் மூலம் உயர் இரத்த அழுத்த நோய், இரத்தத்திலுள்ள சர்க்கரை அளவு பரிசோதனை, ஆதரவு சிகிச்சை, இயன்முறை மருத்துவம் போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் அவிநாசி வட்டாரத்தில் 05.08.2021 அன்று துவக்கி வைக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் மக்களைத்தேடி மருத்துவம் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.திருப்பூர் மாவட்டத்தில் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் கடந்த 05.08.2021 முதல் இதுவரை உயர் இரத்த அழுத்தம் 5,71,968 நபர்களும், நீரிழவு நோய் 2,11,063 நபர்களும், உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழவு நோய் 2,31,119 நபர்களும், நோய் தடுப்பு சிகிச்சை 55,189 நபர்களும், இயன்முறை மருத்துவம் 59,207 நபர்களும் என மொத்தம் 11,28,546 நபர்கள் மக்களைத்தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. தெரிவித்தார்கள்
.பல்லடம் வட்டம், கரைப்புதூர் ஊராட்சி பகுதியைச் சேர்ந்த திரு.ஆறுமுகம்
தெரிவிக்கையில்,எனது பெயர் ஆறுமுகம். எனக்கு பிறவியிலேயே இத்தகைய கால் குறைபாடு இருந்தது. அதற்காக சிறு வயது முதல் இயன்முறை சிகிச்சைக்காக பல்வேறு தனியார் மருத்துவமனை மூலம் சிகிச்சை அளித்து வந்தேன். இதன் மூலம் எனக்கு மிகப்பெரிய பொருளாதார செலவு ஏற்பட்டது. அது மட்டுமில்லாமல் எனது சிகிச்சைக்காக நெடுந்தூரம் பயணம் செய்ய முடியாத சூழ்நிலையில் இருந்தேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டத்தை அறிவித்தார்கள். இதன்மூலம் இயன்முறை மருத்துவர்கள் எனது இல்லத்திற்கே வந்து எனக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். இதனால் எனது சிகிச்சைக்கு எந்த விதமான மருத்துவ செலவு இல்லாமல் இல்லத்திலேயே சிகிச்சை பெற முடிகிறது. இத்தகைய திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களை பாதுகாக்க தமிழ்நாட்டின் தன்வந்திரியாக விளங்கி வருகிறார் என தெரிவித்தார்.



கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம் எண்ணேகொள் அணைக்கட்டின் இடது மற்றும் வலது புறத்திலிருந்து புதிய வழங்கு கால்வாய்கள் வெட்டி தென்பெண்ணையாற்றின் உபரி நீரை கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள வறட்சியான பகுதியில் உள்ள ஏரிகளுக்கு நீர் வழங்க ஏதுவாக ரூ.274 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை நீர்வளத்துறை அரசு தலைமைச் செயலாளர் .ஜே.ஜெயகாந்தன் , 28.01.2026 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், நீர்வளத்துறை செயற்பொறியாளர் .செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர் .சபரிநாதன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.